**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 192/2020**

2026–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10–ம் நாள் வெள்ளிக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 10.07.2026 | | |
| பெயர்: | ரசுல்லா பானு<br>(DW1 – Chief.con ) | கணவர் பெயர்: | அப்துல் மாலிக் |
| கிராமம்: | புத்தூர் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | வீட்டுக்குடித்தனம் | வயது : | 50/2026 |

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி : 10.07.2026</u>**

1. கடந்த 01.08.1984 தேதியிட்ட எனது தகப்பனார் அப்துல்சலாம், எனது தாயார் ஜென்னத்னிஷாபீவிக்கு தாவா சொத்தை பொறுத்து எழுதிக்கொடுத்த செட்டில்மென்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.1** ஆகவும்,

2. கடந்த 21.03.2005 தேதியிட்ட எனக்கும், எனது சகோதரரிக்கும் எனது தாயார் எழுதிக்கொடுத்த செட்டில்மென்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகல் **(அசல் தாக்கல் செய்யவில்லை என்பதால், வாதி தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது) பி.வா.சா.ஆ.2** ஆகவும்,

3. அசல் வழக்கு எண்.24/2011 சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற வழக்கின் தீர்ப்பாணை சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.3** ஆகவும்,

4. மயிலாடுதுறை முதன்மை சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண்.35/2011 வழக்கின் தீர்ப்புரை சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.4** ஆகவும்,

5. மயிலாடுதுறை முதன்மை சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண்.35/2011 வழக்கின் தீர்ப்பாணை சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.5** ஆகவும்,

6. மயிலாடுதுறை மாவட்ட நீதிமன்ற மேல்முறையீட்டு வழக்கு எண்.2/2014 வழக்கின் தீர்ப்புரை சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.6** ஆகவும்,

7. மயிலாடுதுறை மாவட்ட நீதிமன்ற மேல்முறையீட்டு வழக்கு எண்.2/2014 வழக்கின் தீர்ப்பாணை சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.7** ஆகவும்,

மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தாவாவை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.